ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 26—5—46 | இதழ் 5

## ★ "எந்தப் பிராமணரைக் குற்றம் சொல்கிறோம்" ★

(கைவல்யம்)

மதுரையில்கருஞ்சட்டைப்படையினர் நடத்திய மாநாட்டில் கண்ணியக்குறைவாக நடந்துகொண்டதாயும், பிராமண சமுகத்தைக் கேவலமான முறையில் தாக்கியதாயும், பிராமண சேவாசங்கக் காரியதரிசி சென்னை முதலமைச்சருக்கும் சட்டமந்திரிக்கும் புகார் செய்திருக்கிறாராம். கருஞ்சட்டைப்படையினர் மாநாட்டின் நடவடிக்கைகள், இந்தியன் பினல் கோட் சட்டத்தின்படி பல அம்சங்கள் ஆட்சேபகரமானதென்றும், 25,30 ஆண்டுகளாகப் பொறுத்துக்கொண்டிருந்த பிராமண சமுகம் பாதுகாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருக்கிறது.

மதுரையிலுள்ள பிராமணசேவா சங்கம், கருஞ்சட்டைக்காரர்களைப் பற்றி முதல்மந்திரிக்கும் சட்டமந்திரிக்கும் புகார்செய்ததும், பத்திரிகைகளுக்கு செய்தியனுப்பியதும் நியாயவிரோதமாகும். எப்படி எனில், மதுரையில் நடந்தகலவரத்தைப்பற்றிக் கவர்மெண்டார்கலக்டரிடம் ரிப்போர்ட் கேட்டிருக்கிறார்கள். போலீஸ் ரிப்போர்ட்டும், கலெக்டர் ரிப்போர்டும் கவர்மெண்ட்டுக்குப்போய் ஆலோசித்து உண்மைதெரிந்து அபிப்பிராயம் கூறவேண்டும். அதற்குள்சாட்சியாகவந்து ஒருபிக்கமே குற்றமிருப்பதாகப் பத்திரிகைகளுக்குச் செய்தி அனுப்புவதும், மந்திரிகளிடம் புகார்செய்வதும் எதற்காக? மந்திரிகள் மனதைத்திருப்பவா? 25, 30 ஆண்டுகளாகப் பொறுத்துக்கொண்டிருந்த பிராமண சமுகம் மதுரைக்கலவரத்தைஒட்டிப் புகார்செய்யக் காரணம் என்ன? எப்பொழுதும் பிராமணர்களுக்கு இந்தப்புத்தியே கை ஆயுதமாக இருந்துவருகிறது. இந்தஆயுதத்தை வைத்துக் கொண்டு இருப்பவர்களே இல்லாததும்பொல்லாததும் சனங்களுக்குச்சொல்லி மனதைக் கெடுத்துக் கலவரத்தை உண்டாக்குகிறார்கள் என்னும் உண்மை இன்றுநேற்றல்ல, பலகாலமாக நடந்துவருகிறதென்பது எல்லாருக்கும்தெரியும். ஆனல்பொய்களை எந்தவிதத்திலாவது பொதுமக்களிடமோ மந்திரிசபையிடமோ பரப்பினலும், தெளிவானயோசனையும் நேர்மையுமுடையவர்கள் பொதுமக்களிலும் மந்திரி சபையிலும் இருப்பார்கள்.

பலகாலமாகப் பிராமணர்களைக் குற்றம்சொல்லுகிறோம் என்கிறார்கள். பிராமணர்களை ஏன்குற்றம் சொல்லுகிறோம் என்பதற்குப் பல தடவைகாரணம்சொல்லியாய்விட்டது. எங்களைவிட அதிகமாகக் குற்றம்சொன்ன பெரியவர்களின்வாக்கியங்களையு சொன்னோம். எதற்காகக் குற்றம் சொல்லுகிறோமோ அந்த இடத்தைப் பிராமணர்கள் என்று சொல்லுகிறவர்கள் கவனிப்பதில்லை.

ஆங்கிலேயர்கள் நமதுநாட்டை வசப்படுத்திக்கொண்டு, நமது பொருளையும் சுகத்தையும் அபகரித்து, ரயில்வண்டி, ஓட்டல் முதலியவைகளில் நம்மைத் தாழ்வு படுத்தினார்கள். ஹைகோர்ட் நீதிபதி முத்துச்சாமிஐயர், முதல் வகுப்புவண்டியில் போனபோது தடுத்தார்கள். 1904-ம் ஆண்டில் காங்கிரஸ் தலைவர் லால்மோகன் கோஸ் அவர்கள் சென்னையிலிருந்து ஊருக்குப் போகையில் அவரை நடுவழியில் இறக்கிவிட்டுப் போய்விட்டார்கள். இப்படியே நமக்கு அநேகவிதமான அவமானங்களும் துன்பங்களும் நடந்திருக்கின்றன. இவைகளுக்குக் காரணம், உயர்ந்த சாதி என்பதும் ஆளுகிறவர்கள் என்பதும் தான். அப்போதெல்லாம் நாம் அதற்காக அவர்களைக் குற்றம் சொன்னோம், திட்டினோம். அவர்களும் முதல் மந்திரிக்கும் சட்டமந்திரிக்கும் புகார்செய்யாமல்—நம்மைக் கிரிமினல் சட்டத்தால் பயமுறுத்தாமல், குற்றத்தை உணர்ந்து, குற்றங்களைக் குறைத்து நம்முடைய இராச்சியத்தை நம்மிடமே ஒப்படைக்க முன்வருகிறார்கள். வெள்ளைக்காரர்கள் நம்நாட்டில் இடம்கேட்டு வாங்கிக் கோட்டை கட்டி வியாபாரம் செய்து, ஆயுதபலத்தாலும், நம் ஒற்றுமைக்குறைவால் ஏற்பட்ட அறிவின்மையாலும் நம்முடைய இராச்சியத்தை ஆண்டார்கள். அது நியாயமல்லவென்று உணர்ந்து, நமது நாட்டைநமக்கேவிட்டு, நாட்டைவிட்டுப் போய்விடுவதாகவும் சொல்லுகிறார்கள். அதுபோலவே பிராமணர்கள் என்றுசொல்லிக்கொள்ளும் நீங்களும் இங்கே வந்து இடம் பெற்றுக்கொண்டு, ஆசிரமமென்றும, மடமென்றும், வேத சாத்திரமென்றும், அதுகடவுளால் சொல்லப்பட்டதென்றும் மதத்தைப் பரப்பி உங்கள் தந்திரத்தாலும் எங்கள் புத்திசபலத்தாலும் எங்களை எல்லாம் உங்களுக்கு கீழோராய் அடிமையாக்கிக் கொண்டீர்கள். அதனால்அநேக அநியாயங்களையும் அவமதிப்பையும் செய்தீர்கள். இன்னும் செய்து வருகிறீர்கள். ஒன்று, அவைகளை விட்டு அன்பொடு சமமென்கின்ற உண்மையான குணத்தோடு வாழ வேண்டும்; அல்லது உங்கள் நாட்டுக்குப் போய் விடவேண்டும். அதற்காகவே உங்களைக் குற்றம் சொல்லுகிறோம். ஆங்கிலேயர்கள் நமது நாட்டைவிட்டுப் போய்விட்டால், இந்து முஸ்லீம் ஒற்றுமை ஏற்பட்டு விடுமென்று மகாத்மா காந்தி சொல்வதுபோல், நீங்கள் போய்விட்டாலோ அல்லது சாதி ஆணவ சமூமேம்பாட்டைவிட்டு விட்டாலோ திராவிட நாட்டில் கோயில்சண்டை மதவேறுபாடு ஒன்றும் இருக்காது. ஒருசாதிக்கு இன்னொருசாதி தாழ்ந்தது என்று எழுதிவைத்துக்கொண்டு அதைக் கடவுள் சொன்னார்; அதுவேசட்டமாக அமுலில் இருக்கவேண்டும்; அதைக்குற்றம் என்று சொன்னால் அதற்குத் தண்டனை என்கிறசட்டங்கள் எந்தநாட்டிலாவது உண்டா? அந்தச்சட்டங்கள் எல்லாம் ஒழிந்துபோகாமல் இனியும் இங்கேமட்டும்இருக்கலாமா? இந்த ஏற்பாடுகளும்சட்டங்களும்போய் விட வேண்டுமென்றே சொல்லுகிறோம்.

ஒரு பிராமணப் பையன் செத்தான்; அதற்காக ஒரு சூத்திரன் தலை வெட்டப்பட்டது; உடனே செத்த பிராமணப்பையன் பிழைத்தான் என்கின்ற வேத தெய்வ இராச்சியமும், மதுரையில் திருமலைநாயக்கர் ஆட்சிக்காலத்தில் "ஸஹஸ்ரசீர்ஷா புருஷ:" என்ற வாக்கியத்திற்கு இராசப் புரோகிதரிடம் பொருள் கேட்ட பிராமணனல்லாதபுலவன் ஒருவனைப்புரோகிதன் ஒருவன் ஒருமுகூர்த்தம்திருமலைநாயக்கரின் சிம்மாசனத்தைக்கேட்டுவாங்கிக்கழுவிலேற்றிய இந்தராச்சியமும், வெள்ளைக்காரர்கள் அதிகாரத்தைக்கொடுத்துவிடுகிறோம் என்றுகூறுவதற்குள்வந்துவிட்டதா? எதை மனதில் வைத்துக்கொண்டு இந்துமந்திரிகள் அதிகாரத்திற்கு வந்த உடனே, 25, 30 ஆண்டுகளாகப் பொறுத்துக் கொண்டிருந்த பிராமண சமுகம் முதல் மந்திரிக்கும் சட்டமந்திரிக்கும் பத்திரிகைகளுக்கும் புகார் செய்து எழுதுகிறார்கள்? எங்கள் தலையை வெட்டவும் எங்களைக் கழுவில் ஏற்றவும், இந்தியன் பினல் கோட் சட்டத்தைக் காட்டிப் பயமுறுத்தவுமான முறையில் காரி

(4-ம் பக்கம் பார்க்க)

## முன்னேறு

[பாரதிதாசன்]

★

ஏறுமுன் னேறுதி ராவிடனே
இன்னலை நீக்குதல் உன்கடனே விரைந்தேறு
வீறுகொண் டேறுவி ரைந்துமுன் னேறுவி
ழாக்கண்ட பிள்ளையைப் போல் மகிழ்ந்தேறுக
நீறுபடுத்திடு வாய்பகை நெஞ்சினை
நீதான் இறைவன் திராவிட நாட்டினுக் கேறு

குமரிஇத் தெற்கிலும் வங்கம் வடக்கிலும்
கோட்டும் திரைக்கடல் மற்றிரு பாங்கிலும்
அமையக் கிடந்த திராவிட நாட்டினை
ஆண்டவன் ஆளப்பிறந்தவன் நீவிரைந் தேறு

செல்வத்தை நல்கும் மலைகளும் மண்ணிடைத்
தேனென்று பாய்ந்திடும் ஆறும் சுனைகளும்
நெல்லைக் குவித்திடும் நன்செயும் முத்தை
நிறைக்கும் திரைகோள் திராவிடம் வெல்க என்றேறு

வையம் எதிர்த்து வந்தாலும் கலங்காத
மறவரும் பச்சை மயிலொத்த பெண்களும்
மெய்யறம் காத்துநல் லின்பத்திலாழ்ந்திடும்
மேன்மைத் திராவிடம் வாழியவே என ஏறு

திராவிட நாடு

காஞ்சி] 26—5—46 [ஞாயிறு

# மரண சாசனம்

★

'நான் சாகவில்லை! நோய்க்கிருமிகள் என் உடலைத் துளைத்து, இரத்தத்தைக் குடித்து, என்னை நடைப்பிணமாக்கியபிறகு, படுக்கையில் புரண்டு, கண் மங்கி காது பஞ்சடைந்து, ஈளை கட்டி, இருமி, விக்கி வியர்த்து, நான் சாகவில்லை பாம்பு கடித்து விஷம் ஏறிச்சாகவில்லை. புலிகடித்து இறக்கவில்லை. நான்சாகவில்லை, தோழர்களே! கொல்லப்பட்டேன்!! என் கடமையைக் களிப்புடன் செய்துகொண்டு இருக்கையில் கொல்லப் பட்டேன். உள்ளத்திலே, மூண்ட உணர்வுத்தீயினால் உந்தப்பட்டு உற்சாகத்துடன், ஊர்சுற்ற உழைத்துக்கொண்டிருந்த நேரத்தில் கொல்லப்பட்டேன். எந்த மக்களுடைய வாழ்வு துலங்க வேண்டு மென்பதற்காக என் சொந்த வாழ்வு சிதைவதையும்பொருட்படுத்தாதுபணி புரிந்து வந்தேனோ, அதே மக்களாலேயே கொல்லப்பட்டேன். தன்புனை விரோதி என்று கருதிக்கொண்டு தொண்டு செய்பவனைத்துரோகியென்று எண்ணிக்கொண்டு, மனதிலே மாற்றான் தூவிய எண்ணத்தை வளர விட்டுக்கொண்டதால், மருண்ட மக்கள் என்னைக் கொன்றனர். என்னைக் கொல்வதன் மூலம், ஏதோ ஓர் பெரிய கேட்டினைக் களைவதாக அவர்கள் எண்ணிக்கொண்டனர் அவர்கள் அறியார்கள், அவர்கள் கொன்றது தங்களுடைய தோழனை தன்னை இழந்தவனை, என்பதை. என் இரத்தம் அவர்களின் கண்களுக்குக் காட்சியாக இருந்திருக்கும். அவர்கள், நெடுநாளைத்தப் பிறகேனும் கண்ணீர் சொரிவர் சிந்தப்பட்ட இரத்தம், சமுதாயக் கறையைக் கழுவத் தியாகி செய்தகடைசிய பணி என்பதை உணர்ந்து. செல்லால் செயலால், அவர்களுக்காகவே, பாடுபட்டேன். இந்நாளை அந்தச் சேவை பயன்பட்டது. நான் வீணுக்கு மடியவில்லை. வேலையைச் செய்துவிட்டே மடிந்தேன். புகழ்வோர் இன்று உளர் நானே அறிவேன் உண்மையை. அறியாமற்போயினுமென்ன? நான் அறிவேன், உயிர் போகும்வரை, நான், மனமார நம்பிய உன்னதமான கொள்கைகளைப் பரப்ப உழைத்தது. அந்த பணியிலேயே, இறந்துபட்டேன் என்பதை. நான் சாகவில்லை செத்துவிட்டிருந்தால் இந்தச் சாஸனம் தேவைப்பட்டிராது. ஏனெனில், என் வாழ்நாள் முழுவதும், பணிபுரிந்துவிட்டிருப்பேன் இப்போதோ, நான் கொல்லப்பட்டேன் வாழ்ந்திருப்பின் பணிபுரிந்திருப்பேன்; அந்தப் பணி புரிய முடியாத நிலை ஏற்பட்டது செய்யக்கூடியது அத்தனையும் செய்து முடிக்குமுன் கொல்லப்பட்டதால், செய்ய வேண்டியபணியில் செய்யாதுவிட்ட அளவு கொஞ்சம் இருக்கிறது. பாக்கி இருக்கிறது என்னிடம் இரக்கம்காட்டுவோர், என் பொருட்டுக் கண்ணீர் விடுவோர் அந்த பாக்கிக்காரியத்தை, என் சார்பில் செய்ய வேண்டும். இதுவே என் மரண சாசனம்.''

திராவிடர் கழகத்திலுள்ள தோழர்கள் ஒவ்வொருவரும், தயாரித்துக்கொள்ளவேண்டிய மரண சாசனம் இது. வீழ்ச்சியுற்ற இனத்தை எழுச்சிபெறச் செய்துவிட்டோம்; எந்தவிலை கொடுத்தேனும், விடுதலையைப் பெற்றுத் தீரவேண்டிய கட்டத்தில் வந்துவிட்டோம், வெட்டும் குத்தும், இனி நம்மை விரைந்து தேடிவரும்; வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே அமைந்துள்ள ஊஞ்சலிலேயே நாம்உலாவவேண்டியவர்களாக இருப்போம்; வைகைக்கரையிலே, சென்ற கிழமை, நடந்த அமளி நமக்கு அறிவுறுத்தும் பாடம் அதுதான்; நாம் இருக்குமட்டும் தமது ஆதிக்கத்துக்கு ஆபத்துதான் என்பதை ஐயந்திரிபற அறிந்துகொண்ட வர்ணாஸ்சிரமம், நாம் செத்தால் மட்டுமே, தான் இன்னும் கொஞ்ச காலத்துக்கேனும் ஜீவித்திருக்கமுடியும் என்றுநன்கு தெரிந்துகொண்டு, நம்மைக்கொல்லக் கோர நாட்டியம் செய்தது. நமது இரத்தத்தையும் கொஞ்சம் குடித்து ருசி பார்த்தது.

பகலிலிருந்து இரவு வரும்வரை, பரந்த ஆற்றுவெளியில், பாண்டிய மன்னரின் பரிவாரங்கள்நடமாடிய இடத்தில், யவனரும் கிரேக்கரும், பொன்னையும் மணியையும் வீசி, துகிலையும் அகிலையும் வாங்கிச் சென்ற மதுரையில், கல்லையும் மண்ணையும், கத்தியையும் அரிவாளையும் தடியையும் வீசி, தமிழரின் இரத்தத்தைத்தமிழர்கொட்டினர். ஆண்களையும் பெண்களையும் அலற அடித்தனர். சிக்கினவர்களைச் சீரழித்தனர். மதுரையில், அல்லோலகல்லோலமாயிற்று. இவ்வளவும், எதற்குப்பிறகு? ஓர் நாளும் ஓர் இரவும், மதுரையே கண்டிராத மகத்தான மாநாடு நடைபெற்று, மக்களின் மனதிலே மகிழ்ச்சிப்பெருக்கெடுத்தோடிய பிறகு! மாநாட்டுத் தலைவர் பெரியார், திராவிடத் தோழர்களுக்குக் கட்டுப்பாடும் ஒழுங்கும் தேவை என்பதை மணிக்கணக்கில் வற்புறுத்திக் கூறியதுடன் காங்கிரஸ் ஆட்சியினருடன் நாம் கண்மூடித்தனமான எதிர்ப்பில் இறங்க மாட்டோம், நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நற்காரியங்களிலே அவர்கள் ஈடுபட்டால் ஒத்துழைப்போம் என்று இசைமொழி பேசியபிறகு. ஏன் விளைந்தது பெருங்கலகம்?

மதுரையில் இப்படிஒரு மாநாடா! அதற்கு,நாற்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கூடுவதா? பெண்கள் இவ்வளவு பெருங்கூட்டமாகவா? ஊர்வலம், இவ்வளவு அழகாக, அமைதியாக, கட்டுப்பாடாக, நடப்பதா? பிரச்சாரத்தின் தன்மை இப்படிஇருப்பதா. யாரையும் புண்படுத்தாமல், விஷயவிளக்கமும் அறிவு வளர்ச்சியும் தருவதாக இருக்கிறதே, கலகஉணர்ச்சியைக் கிளப்பிவிடவும் வழிகாணோமே, என்ன செய்வது? இரவெல்லாம், திருவிழாப்போல்,திரள் திரளாகக் கூட்டமா? நீலநிறவானிலே நீந்தி விளையாடும் நிலவும், அதன் ஒளியால் ஒளிபெற்றவெண் மணலும், அந்த மணற் பரப்பிலே, திராவிடத்தோழர்களும், அவர்கள் நெஞ்சிலே, களிப்பும், இருப்பதா? அந்தக் காட்சியைக்கண்டும் நாம் சகிப்பதா?என்ற எண்ணம்கொண்டனர்;கூடினர்; யாதுபேசினரோ; என்ன திட்டம்வகுத்தனரோ நாம் அறியோம்; புன்னகைப் பூந்தோட்டத்தைப் புயல் அடிக்குமிடமாக்கினர் மறுநாள். களிப்பு நடமாடிய இடத்திலே கலகத்தை நடனமிட விட்டனர். நாசவேலை செய்தனர்.

இவ்வளவுக்கும், காரணம்கூற வேண்டி, கோயில்சென்று பெண்களைக் கேவலமாகப் பேசினர், கொடிகொளுத்தினர்,விக்ரஹத்தை எடுத்தனர், என்று பழிகூறினர். செய்தவர்கள்யார்? கருப்புச்சட்டைப்படையினராம்! கோயிலிலே அதிகாரிகள், ஆள் அம்பு இல்லையா? அவர்கள் ஏன், அந்த நேரத்திலேயே, அந்தத் தோழர்களைப் பிடித்திருக்கக்கூடாது, அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்கக் கூடாது? செய்தனரா? இல்லை! கூறப்படும் செயலைப் புரிந்தவர்களைக் காட்டவுமில்லை; செயலைக் கண்டவர்கள் இன்னின்னார் என்று சொல்லவுமில்லை; செயல்நடந்ததாகக் கூறப்படும், கோயிலிலே உள்ள அதிகாரிகள் இதுபற்றி வாய்திறந்தொரு வார்த்தைகூறவுமில்லை; மீனாட்சி ஆலயத்திலே பங்கம் செய்ததாகப் புகார்கூறினரேயன்றி, அம்மையின் பெருமையைக் கூறிக்கொண்டல்ல அமளி நடத்தியது, வந்தேமாதர கோஷத்துடன்; தேசிய நாதத்துடன் நடத்தினர். ஒன்றுக்கொன்று பொருத்தமோ, பொருள் விளக்கமோ, இருப்பதாக யாரேனும் கூறமுடியுமா?

அக்ரமமாக அமளியை நடத்திவிட்டு, தமது செயலை மறைக்க இந்தத் திரையைத் தயாரித்துக்கொண்டனர். துரைத்தனத்திலே வீற்றிருப்பவர்கள், தமது கட்சியினர், ஆகவே, எதிர்க்கட்சியினரை எது செய்யினும், அவர்மீது என்னபழிச்சொல் வீசினும்,கேட்பார் இரார், என்ற தைரியம்தவிர, வேறில்லை.

கருப்புச்சட்டைப் படையினரைக்கண்ட இடங்களிலெல்லாம் அடித்தனர்; துரத்தினர்; கருப்புச்சட்டைகளைக் கொளுத்தினர்! மாநாட்டுப்பந்தலையே கொளுத்தினர்! ஆத்திரம்கொண்ட பொதுமக்கள் செய்தனர் என்று அகமகிழ்ச்சியுடன், தேசிய இதழ்கள், தீட்டின. நெடுநாட்களாக இருந்து வந்த நெஞ்சுஊறல் ஓரளவுக்கு அவைகளுக்குத் தீர்ந்திருக்கும்! வெற்றிக்களிப்புடன் இவைகளை எழுதியபிறகு, புத்திமதிகள் கூறச் சில ஏடுகள் தவங்கின. நாடு, எதையும் சகித்துக்கொள்ளும், ஆனல் கோயில் விஷயமாக மட்டும், பொறுக்காது, என்று ஒரு ஏடு, எழுதுகிறது. செய்தது சரி என்று தட்டிக்கொடுக்கும் முறையிலும், தூண்டிவிடும் முறையிலும், எழுதுகின்றன சிலஏடுகள். ஐயா ண்டி செய்பவர் தமக்கிருக்கும் மகத்தான செல்வாக்கை மானி[illegible] அறிந்து [illegible] செய்பவர் உதவிற்று என்று மனங்களிக்கவும் முன்வந்துள்ளன சில ஏடுகள். ஏடு இன்றி இடர்ப்படும் இயக்கத்துக்கு, இவை, கட்டணமில்லா விளம்பரம்! காசுகொடுத்து இத்தனை ஏடுகளிலும், அகில இந்திய ரேடியோவிலும், நாம், கருப்புச்சட்டைப்படையின் வளர்ச்சியைப்பற்றி மக்களுக்குக் கூறமுடியாது. சிறிது இரத்தம் கொடுத்துப் பெற்றோம்; பழிகூறப்பட்டது என்ற போதிலும், அன்றும் மறுநாளும், பேறு சிலநாட்களும், 'இருக்கும்! செய்திருப்பர்,' என்று மக்கள் நம்பியும் இருக்கக் கூடுமென்ற போதிலும். மெள்ள மெள்ள, அவர்கள் "இருக்குமா? இப்படி நடந்திருக்குமா? ஏன் செய்யப்போகிறார்கள்? செய்தார்கள் என்றே வைத்துக்கொள்வோம், செய்தவர்களைப் பிடிப்பது, தண்டிப்பதுதானே முறை, அதற்காகவேண்டி ஆயிரக்கணக்கான மக்களை இம்சிப்பதா, ஊரையே அமளியிலே ஈடுபடுத்துவதா?" என்று யோசிக்காமல் இருக்கமுடியாது. யோசனை செய்பவர்களிலே நேர்மையாளர்கள் அனைவரும், உண்மையை உணரத்தான் செய்வார்கள்.


சம்பவம் நடந்தஇடம் மதுரை. ஆனல்,கருஞ்சட்டைப்படையைப் பற்றி "இந்தியா" எங்கும்பேச்சு! இதற்காக நாம்கொடுத்தவிலை, சிறிதளவு இரத்தம், கல்தடுக்கிக்கீழே விழுந்திருந்தால்கூட இரத்தம் கசியும்! உல்லாசப் பயணத்திலே, மோட்டார் மோதினல், இரத்தம் வழியும்! அந்த இரத்தத்தைவிட வைகைமணலிலே கலந்த இரத்தம் மகத்தான நன்மையை நமக்கு அளித்துவிட்டது. நாம்,வாழ்ந்தால் தமக்கு வாழ்வுஇல்லை, என்றஎண்ணத்தில், பழைமை, வர்ணாஸ்சிரமம், ஆரியம்வந்துவிட்டது, என்ற நிலையை நமக்குத்தெரிவித்து விட்டது. நம்நன்றி அதற்காக.

மதுரையில், கலக உணர்ச்சியை அவ்வளவு சுலபத்திலே தூண்டிவிட, அவர்களுக்கு வசதிஅதிகம். கூர்ந்து கவனிப்பவர்கள் இதனை நன்கு அறிந்து கொள்ளக்கூடும். தேசியஏடுகள் திருப்தியுடன் தீட்டினவே, "ஆத்திரங்கொண்ட பொதுமக்கள்" இச்செயல் புரிந்தனர், என்று, அதன்உண்மை எப்படிப்பட்டது என்பதை அறிந்து சொள்ளலாம். கருப்புச்சட்டைப் படையினர் அடாது செய்தனர், அதனலேயே இவ்வளவு அமளி நடந்தது, என்று பேசுவோரும், மதுரையம்பதியின் பற்பலசம்பவங்களைக்கூர்ந்துநோக்கினல், இடம், அத்தகைய கலகத்துக்குஏற்றதாக அமைந்திருக்கிறது என்பதை உணரலாம்.

சென்றகிழமை கருப்புச்சட்டைப்படையினர்மீதுகோபம்பிறந்தது. எனவேதான் அமளிநடந்தது, என்று குற்றஞ்சாட்டுகின்றனர் கருப்புச்சட்டைப்படையினர்மீது திருப்பிவிட்டனர்.

இந்தக்கிழமை நடந்ததுஎன்ன? திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ், ஒரு கூட்டத்தால், வழிமறித்துநிறுத்தப்பட்டது. டிரைவர், பயர்மென் ஆகியோர் தாக்கப்பட்டனர். அவர்களைப் பக்கத்திலே இருந்தசுடுகாட்டுக்குத்தூக்கிச்சென்று அடித்தனர். அடித்ததுடன் விடவில்லை, அவர்களிடம் இருந்த மணிபர்ஸ், கைக்கடியாரம் ஆகியவற்றைப் பறித்துக்கொண்டனர். என்ஜினில் தண்ணீர் ஊற்றி அணைத்தனர், கலங்கியமக்கள், ஆபத்து அதிகரிக்கும் என்றுபயந்து, ரயிலைவிட்டுக் கீழிறங்கி,நடந்துசென்றனர். பிறகு, ரிசர்வ்போலீசார் வந்தனர்; பாதுகாப்புத்தரப்பட்டு, இரயில் மதுரைக்குச்சென்றது.

இது, மதுரையில் நடைபெற்ற திருவிளையாடல், கருப்புச்சட்டைப் படையினர் மீதுஅல்ல, ரயில்வே மீதுபாய்ந்தனர். ஊரெல்லாம்நடைபெற்றரயில்வே ஸ்ட்ரைக்கில், மதுரையில்தவிர, இந்த அமளி வேறுஎங்கும் இல்லை. வேலைநிறுத்தத்தலைவர் வேலைநிறுத்தத்துக்கு விரோதமாக இருந்த டிரைவர், பயர்மென் ஆகியோரின் மணிபர்சையும், கைக்கடியாரத்தையும் பறித்துக்கொண்டு, தாக்கும் நிலை ஏற்படும்என்று எண்ணினவர் அல்ல. வேறுஎங்கும் இவ்வித அமளிநடந்ததில்லை. ஆனல் மதுரையில் நடந்தது.


ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கியுலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் மேல்வீதி. கும்பகோணம்.

Best copy available

கருப்புச்சட்டைப்படை மாநாடு நடைபெறுவதற்கு முன் கிழமை, தோழர் புலாபாய்தேசாய் மரணத்துக்காக நாட்டிலே, எவ்வளவோ இடங்களில், ஊர்வலம், கடை அடைப்பு நடந்தன. எங்கும் அமளி கிடையாது. மதுரையில் உண்டு! ஊர்வலத்தில் கலகம், கடைகள்மீது கல்வீச்சு! ரிசர்வ்போலீஸ் குறுக்கிட்டுக் கண்ணீர்புகைக் குண்டு வீசிக் கூட்டத்தைக் கலைத்தனர். மதுரையில் மட்டும்தான்!

அதற்கும் முன்பு, காங்கிரஸ் கம்யூனிஸ்டு கைகலப்பு நேரிட்டு, மதுரையில் பெருங்கலவரம். கம்யூனிஸ்டு நிலையத்தின்மீது கல்வீச்சு, இருதரப்பிலும், பலமான சண்டைகள். பயங்கரமான சூழ்நிலை இருந்தது.

அதற்குமுன்பும், காமராஜ், ராஜகோபாலாச்சாரியார் தகராரின் போது, கண்டன ஊர்வலம், அதிலே கலகம், கல்வீச்சு, கைகலப்பு, கத்திக்குத்துகள், இன்னபிற.

மதுரையில், கருப்புச்சட்டைப் படையினர் விரோதகாத காரியம் செய்யவே, மக்கள் ஆத்திரங்கொண்டுகிளப்பி, கலகம் விளைத்தனர், என்றுகூறிக்கண்ணில் மண் தூவுவோருக்குக் கூறுகிறோம் மதுரையில், இத்தகைய சம்பவங்கள், நித்யநிகழ்ச்சியாகிவிட்டன; கிழமை தோறும்உண்டு இத்தகையவிழா! திங்கள்தோறுந்திருவிளையாடல் நடைபெறும்.

அவைகளை எல்லாம், தேசிய இதழ்கள், பத்திரிகையிலே மூலைமுடுக்கிலே, கடுகு எழுத்திலே பிரசுரிப்பா; கருப்புச்சட்டைப் படைமீது நடந்த தாக்குதலை மட்டும், திருப்தியுடன், சந்தோஷத்துடன், மூந்திரி எழுத்தில் முதல் பக்கத்தில் போட்டு, நாட்டுமக்களுக்கு, அதன் மூலம், கருப்புச் சட்டைமீது வெறுப்பு மூட்டிவிடலாம் என்று எண்ணுகின்றன. நாட்டுமக்களில் இதழ்களில் வரும் செய்திகளையும் படித்துச்சிந்தனைக்குப் வேலைதரும் பகுதியினர் உள்ளனர் அவர்கள் மதுரையில், கலகமும் கலவரமும், வாரந்தோறும் நடைபெறுகிறது, எந்தச்சாக்குக் கிடைத்தாலும் போதும், கலகம் கூத்தாடுகிறது என்பதை உணர்வர். உணர்வோரில், உறுதியுள்ளப்படைத்தவர்கள் கேட்பர், சர்க்காரைப் பார்த்து, ஏன் மதுரையில் இவ்விதம் கலக உணர்ச்சி அடங்காத பசியுடன் இருக்கிறது என்று. யார் இத்தகைய கலக உணர்ச்சியைக்கிளப்புகிறார்கள்? என்பதைக்கண்டறியச் செய்வர்.

எனவே, கருப்புச்சட்டைப்படையினர்மீது கடுங்கோபங்கொண்ட மதுரை மக்கள், கலகம்செய்தனர், என்ற தேசியவாசகம் முழுஉண்மையல்ல. வாரந்தோறும் மதுரையில் ஏதேனும் ஓர் கலகம்நடக்கும், இந்தக்கிழமை கருப்புச்சட்டைப் படையினர்மீது, கலகக்காரர்கள் பாய்ந்தனர்.

மக்களின் மனதுக்குப் பிடிக்காதசெயலைச் செய்தனர், எனவே தான் பெரியகலகம் விளைந்தது, என்று மற்றோர் சாரார் வாதாடுகின்றனர். அதுவும் தவறான வாதமேயாகும்.

கலகம் செய்வது என்று ஒரு சாரார் தீர்மானித்துவிட்டால், செய்துவிட்டுக் காரணம் தேடுவர். கலகம், கருப்புச்சட்டைப்படைக்கு எதிரிடையாகமட்டுமல்ல, சென்ற திங்கள், காந்தியாருக்கு எதிரிடையாகவும் நடந்திருக்கிறது. தேசியத்தாட்கள், தமதுநிலையைக்காப்பாற்றிக்கொள்வதற்காக, அந்தக்கலகம் செய்தவர்களைக் "காலிகள்" என்று கூறி, மதுரைக்கலகம் நடத்தியவர்களை "ஆத்திரங்கொண்ட பொதுமக்கள்" என்று அழைக்கும். அகராதியின் துணைதேடி, அந்த ஏடுகள், விஷயத்தை வேறுஉருவில்காட்டும். ஆனால் கலகம், கலகந்தானே; அது கருப்புச்சட்டைப்படைக்கு எதிரிடையாகமட்டுமல்ல, காந்தியாருக்கு எதிரிடையாகவும் நடக்கிறது. எனவே, கலகம் நடந்ததாமே! காயமாமே! கத்திக்குத்தாமே! என்று கேட்பதன் மூலம், கருப்புச்சட்டைப்படையினரைக் கேலி செய்வதாகக்கருதும் தோழர்கள், ஆர அமர யோசித்தால், எதற்கும் கலகம் நடக்கிறது அதுபோல் இதற்கும் நடக்கிறது, என்று உணர்வர்.

எனவே, கருப்புச்சட்டைப்படையினர்மீது, நடத்தப்பட்ட தாக்குதல், எப்போதும் கலகம் செய்வதற்குத்தயாராக உள்ள கூட்டத்தைக் கொண்டு கலகவாடை கலந்து வீசியபடி உள்ள மதுரையிலே, முதல்நாள்முழுவெற்றியுடன் நடைபெற்ற மாநாட்டைக்கண்டு மனம் புழுங்கிய ஆரியர், கிளப்பிவிட்டதாகும். இந்தச் செயலைப், பிறர் பழிக்காதிருக்க வேண்டி, கட்டிவிடப்பட்டகாரணங்களே, கோயில் புகுந்தனர், பெண்களை இகழ்ந்தனர் என்பனவெல்லாம்.

இனி ஏன் அந்தக்கலகம் வெறுங் கூச்சல், கல் மண் வீச்சோடு முடியாமல், ஒருநாள் முழுவதும் நீடித்தது என்பதைக் கவனிப்போம்.

தேசியத்தாள்கள் எழுதின, "கருப்புச்சட்டைப் படையினர் கண்ட கண்ட இடங்களில் அடிக்கப்பட்டனர்" என்று உண்மை. ஆனால், அதிலே மற்றோர் உண்மையும்தொக்கி இருக்கிறது. கண்ட கண்ட இடங்களில் கருப்புச்சட்டையினர் அடிக்கப்பட்டனர் என்றால், கண்ட கண்ட இடங்களிலும் கருப்புச்சட்டையினர் இருந்தனர் என்று ஏற்படுகிறது. அதாவது, மதுரையில், எந்தப் பக்கத்திலும், கருப்புச்சட்டைப்படையினர் இருந்தனர். மதுரை கிராமமல்ல: பெரிய நகரம். அந்தப்பெரிய நகரத்தில், எங்கு பார்த்தாலும் கருப்புச்சட்டைப்படையினர் இருந்தனர். மாநாட்டுக்கு அவ்வளவு திரள் திரளாகத் தோழர்கள் வந்திருந்தனர். மாநாட்டின், அளவுக்கு இதுவோர் சான்று.

ஏராளமான கூட்டம் இருக்கவேதான் கலகக்காரரால், தமது காரியத்தை விரைவிலேயோ, சுலபத்திலேயோ செய்து முடிக்க முடியவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்பு இருந்த நிலையில், ஒரே வந்தேமாதரக் கூச்சலில், கலகம் முடிந்துவிடும், மாநாடு கலைந்துவிடும், கூட்டம் இராது. இன்று நிலைமை வேறு! மாநாட்டிலே மனத்திரள். கொள்கைக்காக வாழ்பவர்கள். எனவே அந்தப்பெருங்கூட்டத்தை, வெறுங் கூச்சலால் கலைத்துவிட முடியாது. கல் போதவில்லை! கத்தியும் அரிவாளும்தேவைப்பட்டது! ஒருசிறுகூட்டத்தால் முடியவில்லை; ஊரையே திரட்டிக்கொண்டு வரவேண்டியதாயிற்று! ஒருமணி நேரம் இரண்டு மணிநேரம் போதவில்லை; ஒருநாள் முழுவதும்தேவைப்பட்டது; இதன் ஆழ்ந்தபொருள் என்ன? மதுரையில், ஆரியம், தனது முழுச்சக்தியையும் திரட்டி, முழுமூச்சாக, ஒரு நாள் முழுவதும் எதிர்க்கவேண்டிய அளவுக்கு, நாம் வளர்ச்சி அடைந்திருக்கிறோம்.

இந்த எதிர்ப்புக்கூட, நமது, திட்டம், கொள்கை ஆகியவைகளை மறுத்துரைத்து, மக்களுக்கு, அந்தக்கொள்கைகள் பிடிக்காதபடி செய்து பிறகு, தோன்றியதல்ல. மக்கள் கேட்டதும் மருட்சி அடையக்கூடிய பழிகளைச் சுமத்தி, ஊரைத்திரட்டிவந்தே, எதிர்ப்பை நடத்த முடிந்தது? நமதுகொள்கைகளை மறுத்துப் பேசினர், பயன் காணவில்லை. எனவே, செய்யாததைச் செய்ததாகக்கூறி, மக்களைத் தூண்டியாவது பார்ப்போம் என்ற நிலைக்கு வந்துள்ளனர். இது நமது வளர்ச்சியின் அறிகுறி; வேறல்ல.

இருதரப்பினரும் கைகலக்காத நிலையில் இந்த அமளி. அதாவது, கருப்புச்சட்டைப் படையினருக்கும், கலகக்காரருக்கும் இடையே போலீஸ், துப்பாக்கியுடன். இடையே அந்த அரண் இல்லாதிருந்தால், நிலைமை வேறாகி இருந்திருக்கும். இருதரப்பிலும், சேதம் அமோகமாகியிருக்கும். அந்த அளவுக்கு, நம்பவரின் எண்ணிக்கையும், அவர்களின் உறுதியும் இருந்தது. குழந்தை குட்டிகளுடன் வந்திருந்த தாய்மார்கள், காப்பாற்றப்பட வேண்டும், அதுவே நீங்கள் செய்யவேண்டிய பணி; என்று பெரியார் கட்டளை பிறப்பித்தார். படையினர் அப்பணி புரிந்தனர். சூழநின்றிருந்தோர் தாக்கினர். நகரில், சிதறி இருந்த கருப்புச்சட்டைப்படையினர் தாக்குண்டனர். நிலைமை இதுவே.

"அடித்தோம்! துரத்தித்துரத்தி அடித்தோம்! வீசினோம், கற்களை வாரிவாரி வீசினோம்" என்றுகளிப்புடன் கலகக்காரர்கள் பேசிக்கொள்வர்; ஆனால், களிப்பைக் கெடுக்கும் விதத்திலே, அவர்கள் மனமே அவர்களுக்குச்சொல்லும், "ஆமாம் அடித்தோம், ஆனால், எவ்வளவு ஏராளமாக இருந்தார்கள்; எவ்வளவு பெரிய கூட்டம்! எப்படி அந்தக் கட்சிக்கு அவ்வளவு ஆதரவாளர்கள்கிடைத்தனர்! பெண்கள்எவ்வளவுபேர்! குழந்தை குட்டிகளையும் தூக்கிக்கொண்டு வந்தார்களே! இரவு இரண்டு மணி வரையில்லவா வைகையில் கூட்டம் நடத்தினார்கள்! ஒரு நாள் முழுதும் ஓயாது கலகம் செய்ய வேண்டி அல்லவா நேரிட்டது, இதற்கு முன்பு நாம் நடத்திய கலகங்களை எல்லாம்விட இதுபெரிது. அவ்வளவு கூட்டம் அந்தக்கட்சிக்குச் சேர்ந்துவிட்டது. எப்படி? என்று கூறும்.

நமது வளர்ச்சியின் அறிகுறி நமக்குமட்டுமல்ல, பிராமணசேவா சங்கத்தாருக்கும் தெரிந்திருக்கிறது. அவர்களின் மகஜர், நமது வளர்ச்சிக்கு ஆரியம் தரும் நற்சாட்சிப்பத்திரம்.

எல்லாம்சரி, ஆனால், இத்தகைய கலகங்களால்சேதம் நேரிடுகிறதே; இரத்தம் வீணாக்கப்படுகிறதே என்று எண்ணுகிறார்கள் சிலர். அவர்களுக்கு ஒருவார்த்தை. நாம், எடுத்துக்கொண்டுள்ள மகத்தான காரியத்தின் தன்மையை ஒருகணம் சிந்திக்கவேண்டும்.

யுகயுகமாக இருந்துவருவதாகக் கூறப்படும் ஏற்பாடுகளை நாம், திருத்தி அமைக்க விரும்புகிறோம். மமதை மலைக்கு வேட்டு வைக்கிறோம். நம்மீது சிறுசிறு துண்டுகள் சிதறி விழுந்து, மண்டையைப் பிளக்கின்றன என்றால், நாம் வைத்த வேட்டு மலையைப் பிளந்து வருகிறதுஎன்றுபொருள். மலையைப்பிளக்கும் காரியத்தில் இறங்கிவிட்டு, மலர் தலைமீது விழும் என்று எதிர்பார்க்க முடியாதல்லவா! நம்மை நாமாகவே இந்தக்காரியத்துக்கு ஒப்படைத்து விட்டோம். உலகில் பலபாகங்களிலே, இதற்கு ஒப்பான காரியம் செய்யப்புகுந்தவர்கள், பட்டபாடுகள் இன்று, பல்கலைக்கழகங்களின் பாடப்புத்தகங்களாகிவிட்டன. அன்று சாக்ரடீஸ் குடித்த விஷம், இன்றுவரை, சாகா நிலையைச் சாக்ரடீசுக்குத் தந்துவிட்டது. பழியையும்இழிவையும், எதிர்ப்பையும் ஆபத்தையும், தலைமீது ஏற்றுக்கொண்டு, பணிபுரிந்து சென்று, அந்தப்பணியின் பலனைப் பின் சந்ததியார் அனுபவிக்கச் செய்யும், பரம்பரையில், நாம், சேர்ந்திருக்கிறோம். நமக்கு, இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும்; ஆனால் நமது உழைப்பு ஒரு நாளும் வீண் போகாது.

கடுவிஷம் கொடுத்துக்கொல்லப்பட்டோர், காரிருள் சிறையில் ஆயுட்கால முழுதும் தள்ளப்பட்டோர், கல்லால் அடித்துத்துரத்தப்பட்டோர், சிலுவையில் அறையப்பட்டோர், சிறைத்தைக்குஇரையாக்கப்பட்டோர், கழுத்து நெரிக்கப்பட்டோர், கனலில் தள்ளப்பட்டோர், கண்டதுண்ட மாக்கப்பட்டோர், நாட்டு மக்களாலேயே துரத்தி அடிக்கப்பட்டோர், நாதியற்றுப்போனோர், என்று இவ்விதமாகத்தான் இருக்கும், சமுகப் புரட்சிப் பணியிலே ஈடுபட்டவர்களுடைய வாழ்க்கை வரலாறுகள். நாம் அந்த இனம். அவர்களெல்லாம் இன்று, அறிஞர் உலகின் அணிமணிகளாயினர். நம்மையும், பின்சந்ததி மறவாது.

காதிலே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றியகாலம், கட்டிப்போட்டு வீட்டுக்குத் தீயிட்டகாலம், கிணற்றில்தள்ளிக் கல்லிட்டகாலம், கண்களைத்தோண்டி எடுத்த காலம், நாவைத்துண்டித்த காலம், கழுவிலேற்றிய காலம், தலையைக்கொய்த காலம், தணலில் தள்ளிய காலம், இவையெல்லாம் இருந்தன. சீர்திருத்தம் பேசியோர் இவைகளிலே தான்உழன்றனர். பெரும்பாலானவர்கள் சாகவில்லை. கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டதாலேயே அவர்கள் இன்று சாகாதவராக உள்ளனர். எனவேதான், மரணசாசனம் தயாரித்துக் கொண்டு இத்தமகத்தானபோராட்

(அடுத்த பக்கம் பார்க்க)

## பாகவதர்—கிருஷ்ணன்

—o—

"இம்மாகாணத்தில் ஜனநாயக ஆட்சி நடைபெறும் இது போழ்து M. K. T. பாகவதரையும். N. S. கிருஷ்ணனையும் உடனடியாக விடுவிக்குமாறு நமது சர்க்காரைக் கேட்டுக்கொள்வதற்கு ஒரு **சர்வ கட்சி மகாநாடு** சென்னையில் இம்மாத இறுதியில் கூட்டுவதெனத் தீர்மானிக்கப்பெற்றிருக்கிறது.

எல்லா வெளியூர் விடுதலைக் கமிட்டிகளும், சங்கங்களும் இம் முயற்சியில் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**T. M. Ð. ஆச்சாரியார்,**
காரியதரிசி.
பாகவதர்—கிருஷ்ணன்
மத்திய கமிட்டி, சென்னை.

## மரண சாசனம்

3-ம் பக்கத் தொடர்ச்சி

டத்திலே இறங்கவேண்டும் என்று கூறுகிறோம்.

சமுகத்திலே அடிப்படை மாறுதலைவிரும்பும் நாம் கொல்லப்படக்கூடும் என்ற எண்ணத்திற்காக, நாம் இப்பணி நமக்கேன் என்றிருந்துவிடினும், 'சாவு' ஓய்வு எடுத்துக்கொள்ளாது. சாந்தம் பேசினாலும், "இன்றைக்கிருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை ஐயோ!" என்று தான் பதிகம் செவியில் ஒலிக்கும். செத்தால், செத்ததுதான், ஆனால் கடமையைச் செய்கையில் கொல்லப்பட்டால், அது சாகாவரம் பெற்றதாகும்; நாம் வாழ்வோம், நமது உழைப்பின் பலனால் புது வாழ்வு பெறும், நமது பின் சந்ததியாரின் பேச்சில், பாட்டில்! தொட்டிலருகே, பூந்தோட்டத்தருகே, கட்டிலருகே, பட்டி மண்டபத்திலே, நாம்பேசப்படுவோம்,"நமக்காகப்பணி புரிந்தனர் கொல்லப்பட்டனர்" என்று. அப்போதுநாம் வாழ்ந்திருப்பதாகத்தான்பொருள். நமக்கென்ன, மரணம் நேரிடுகை யில் மாளிகை என்ன ஆகுமோ, பத்துமாடிகள் என்ன ஆவமோ, தோட்டம் துரவு என்னகதியோ, தோடு தொங்கட்டம் யாருக்குப் போகுமோ, வாணிபம் குலையுமோ, வட்டித்தொகை கெடுமோ என்ற எண்ணம் குடையட்போகி றதா! ஓடு! ஆவியே! என் னைக்கொன்றுவிட்டாய்! நான் உயிருடன் இருந்தால் உனக்குஆபத்து என்று தெரிந்து இதனைச்செய்தாய். திருப்தி அடையாதே! திரும்பிப் பார்! பிணமாகாது வேறு பலர் உளர்." என்று கூறிக்கொண்டே தான் இறப்போம். எனவே, மரண சாசனம் தயாரித்து விடுங்கள்; மதுரை நமக்குக்கூறும் மகத்தான பாடம் அதுதான்.

மதுரைக்கு மறுகிழமை, குடந்தையில் கூடினர் நமது தோழர்கள், பல ஆயிரக்கணக்கிலே. மதுரையைவிட இங்கு தாய்மார்கள் அதிகம். இருநாள் மாநாடுகள், இருஇரவும் நாடகங்கள்; எழுச்சியின அளவும் தன்மையும், மதுரைச் சம்பவம், கனவிலேகண்ட காட்சியோ என்று எண்ணக்கூடிய வகையினதாக இருந்தது. இதன் பொருள் என்ன? மதுரைச்சம்பவத்தால், மகத்தானநமது இயக்கம் மங்காது என்பதை நமது தோழர்கள் காட்டிவிட்டனர் என்றே பொருள். ஆர்வமும், ஆவேச உணர்ச்சியும்கொண்ட ஆயிரக்கணக்கான இளைஞர்கள், சிலர் மதுரைத்தழும்புகளுடன், அங்கு கூடினர். பணிபுரியத்தயார் என்று முழக்கமிட்டனர். மதுரை ஓய்ந்துவிட்டது. நமது தோழர்கள்மீது கல்வீசியவர்களின் கரத்தின் வலி இன்னும் குறைந்திராது, ஆனால், கல்லடியும் கத்திக்குத்தும் பெற்ற நமது தோழர்கள், புண் ஆறு முன்பே, என்றும்போலவே பணிபுரியக்குடந்தையில் கூடினர். ஆம்! மரணசாசனம் தயாரித்துவிட்டே இந்த மகத்தான காரியத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் வீரத்தை, தியாக உணர்ச்சியை, உறுதியை நாம் பாராட்டுகிறோம்; அவர்களின் வீரத்துக்குத் தலை வணங்குகிறோம். மணலிலே இரத்தம் சிந்திய தோழர்களே! உங்கள் இரத்தம், வீணுக்குச் சிந்தப்படவில்லை. அந்தச்சேதி எண்ணற்ற தமிழரின் இரத்தத்தில் கொதிப்பேற்றி இருக்கிறது. வாழ்வுக்கும் சாவுக்கும் வித்தியாசம் காணமுடியாத மனப்பான்மையைத் தந்துவிட்டது. நாம் கொல்லப்படக்கூடும், ஆனையினால், இருக்கும் இன்றே, இவ்வளவு மகானுசயத்துடனே எழுச்சிப் பணிபுரிவோம் என்ற எண்ணத்தை ஊட்டி விட்டது. கொஞ்சநஞ்சம்நம்மவருக்குஇருந்து வந்த குடும்ப பாசம் பந்தம், ஆகியவைகளையும் மதுரைச் சம்பவம், போக்கடித்துவிட்டது. இனிஇருப்பது நாம், நமது தொண்டு, அதைக்கண்டு துடி துடிக்கும் ஆரியம், அதுவவும் அள்திரம், அதுபாயுமுன் பணிபுரியவேண்டிய அவசரமான நிலைமை, இவ்வளவே! நாம், மரணசாசனம் தயாரித்துவிட்டு, இந்த மகத்தான போராட்டத்தில், ஈடுபட்டுவிட்டோம்.

—

## 'விடுதலை'

திராவிடர் தமிழ்நாளேடு

ஜூன் முதல்தேதி முதல் மீண்டும் வெளியாகிறது.

### சந்தாவிவரம்

ஆண்டு 1க்கு ரூ 12—0—0
6-மாதத்திற்கு ரூ 6—0—0
3-மாதத்திற்கு ரூ 3—0—0
1-மாதத்திற்கு ரூ 1—0—0
தனிப்பிரதிவிலை அரைஅணா

### திராவிடத்தோழர்களே!

ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்கள் உடனே சந்தாதார்களைச் சேர்த்தனுப்ப வேண்டுகிறோம். ஒவ்வொரு கழகமும் ஒருபிரதியாவது வாங்க வேண்டுமென்றோடு தனிப்பட்ட தோழர்களும் ஆதரிக்கவேண்டுகிறோம்.

ஏஜன்சி எடுக்கவிரும்புவோர் பிரதி 1-க்கு 1-ரூபா வீதம் தேவையான பிரதிகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும். பிரதி 1-க்கு 2-பைவீதம் 33⅓% கழிவுதரப்படும். முழுவிவரங்களுக்குஎழுதித்தெரிந்துகொள்ளவும்.

**மானேஜர், விடுதலை,**
2. பாலகிருஷ்ணபிள்ளை தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

## பாரதிதாசன் நிதி

●

கவிஞர் பாரதிதாசன் அவர்களின் நிதிக்காக இதுவரை சேர்ந்துள்ள தொகை:—

## ரூ. 13,778-13-0

## பிராமணர்களே

1-ம் பக்கத் தொடர்ச்சி

யங்களை மேற்கொள்வதன் உட்கருத்தென்ன? ஒரு சாதியை இன்னொரு சாதியும், ஒருமதத்தை இன்னொரு மதமும் குற்றம் சொன்னால் அது குற்றம். ஆனால், இல்லாதது, நடவாதது, நடக்கமுடியாதது, பொய், வஞ்சனை இத்தனையும் சேர்ந்த கொடுமைகளை எல்லாம் எழுதி வைத்துக்கொண்டு, அதைக் கடவுள் சொன்னார் என்றுகூறி மோசடியாலேயே பிழைக்கும் கூட்டத்தைக் குற்றம் சொல்லாமல் இருக்க முடியுமா?

வேதஸ்மிருதிகளின்படி பிரஷ்டர்களானபிராமணர்களைக்குற்றம் சொல்கிறோமேயல்லாமல் மற்றப் பிராமணர்களைக் குற்றம் சொல்லுவதில்லை. வேதஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருக்கிற நெறிகளில் ஏதாவது பிராமணர்களால் கையாளப்படுகின்றனவா? காயத்திரி மந்திரமென்கிற பிராணயாமம் செய்ய வேண்டிய சந்தியா காலத்தில் கிளப்பிலும் சினிமாவிலும் சீட்டாட்டத்திலும் இருக்கும் பிராமணர்கள் உலக சுகங்களில் எதைவிட்டார்கள்? பிராமணர்களுக்கும் மற்றவர்களுக்கும் என்ன வித்தியாசம்? சேலம் பிராமண சேவா சங்கத்தில் சர். சி. பி. அவர்கள் பிராமணனென்றால் இன்னதன்மையுடையவன் என்று சொன்னாரே! அதைக் கவனியாமல் காரியங்களை நடத்தினால் பயனில்லை! பிராமணன் என்றால் யார்? அவன் தொழில் என்ன என்பதைப் பிராமண சேவா சங்கம் கவனிக்கவேண்டும். தன்னுடைய நெறிகளைக் கைவிட்டு அந்நிய நெறிகளைப் படித்துப் பின்பற்றுபவனைப் பிரஷ்டன் என்று ஸ்மிருதி சொல்லியிருப்பதையும் பிராமண சபை தெரிந்துகொள்ளவேண்டும்.

ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை அடக்குதல், சுத்தி, பொறுமை நல்லொழுக்கம், சாஸ்திரஞானம்; அனுபவஞானம் ஆகிய இவைகள் பிராமணனுக்குரிய இயற்கைக் குணங்கள்.

வேதம் கற்றல், கற்பித்தல், யாகம் செய்வித்தல், செய்தல், தானம் கொடுத்தல் — பெற்றுக்கொள்ளுதல் ஆகிய இவைகள் பிராமணனுடைய தொழில்கள். இப்படிப்பட்டவர்களையே பிராமணர்கள் என்று வேதம் சொல்லுகிறது. இப்படிப்பட்டவர்களை நாங்கள் குற்றம் சொல்லுவதில்லை. ஆனால் இந்தப் பிராமணப் பேரை மட்டும் வைத்துக்கொண்டு, தன்னைப் பெரியவனாக நினைத்து அந்த ஆணவத்தால் மற்றவர்களைத் தாழ்வாக மதித்துச் சங்கீத மேடையில் ஒரு தமிழன் பாடினதால் சங்கீதமே தீட்டுப்பட்டுவிட்டது; பிராமண பரிசுத்தம் நீங்கிவிட்டது; ஒரு சைவச் சூத்திரன் பாடினதால் சங்கீதத்தின்சப்தமே போய்விட்டது என்று ஆர்ப்பாட்டம் செய்கிறீர்கள்; அவமானப்படுத்துகிறீர்கள். எங்கள் நிலைமையில் இருந்து அதை ஆலோசித்துப்பாருங்கள். அப்பொழுது உங்கள்குற்றம் உங்களுக்குத்தெரியும். அப்பொழுது முதல்மந்திரிக்கும் சட்ட மந்திரிக்கும் நீங்கள் புகார் செய்ய வேண்டியதுமில்லை, அவர்கள் சலுகையை நாடவேண்டியதுமில்லை. அக்கிரமங்களைபோக்கி எல்லாருக்கும் எல்லாவிதத்திலும் சமஉரிமையான நீதியைச் செய்யவே மந்திரிசபை வந்திருக்கிறதல்லாமல், நீங்கள் செய்யும் நியாய விரோதமான காரியங்களுக்கெல்லாம் சலுகை காட்ட வரவில்லை.

கல்வியும்அறிவும் எல்லாருக்கும் பொது என்பதை எல்லாருமே ஒத்துக்கொண்டு அப்படியே நடக்கின்றன. நமது நாட்டில் சமய நூல்களாலும் கற்பனைக்கதைகளாலும் அந்த மேலான கொள்கையை மறுத்தீர்கள். கடவுள் பெயரைச் சொல்லிமற்றவர்களைப்பயமுறுத்தி அந்த உரிமை எங்களுக்கு மட்டும் தனி உரிமை என்று அனுபவித்தீர்கள். அவைகள் ஆங்கிலேய அரசாட்சியில் அநேகமாக ஒழிந்தது. கோயமுத்தூரில் அம்பேத்கார் வந்து பிரசங்கம்செய்தார். உங்கள் வேதத்தின்படி அவர் சண்டாள சாதியைச் சேர்ந்தவர். உங்களுடைய வேதங்களும் ஸ்மிருதிகளும் அவர்வாயிலிருந்து ஆறுகஓடிற்றே! வேதம் படித்தலே பிராமண ஒழுக்கம் என்று சொல்லுவதைப் பார்த்தால், அம்பேத்காரைப் போலப் பிராமண சேவா சங்கத்தில் எத்தனை பிராமணர்கள் இருப்பார்கள் என்று ஆலோசித்துப்பாருங்கள். கல்வியும் அறிவும் விர்த்தியாகும் இந்தக்காலத்தில் பழைய போக்காலும் தந்திரத்தாலும் யாருக்கும் பலனில்லை.

மதுரையில் ஏற்பட்ட கலவரம், உங்கள் சுகபோக வாழ்வுக்கு கேடு வந்துவிடுமோ என்று நீங்கள் சந்தேகப்பட்டு, உங்களால் உண்டாக்கப்பட்ட கலவரமே என்பதை நீங்கள் எவ்வளவு முயன்றாலும் அதை வெகு நாளைக்கு மறைத்துவைக்க முடியாது. உலகப்பொது விதியை உல்லங்கனம் செய்வது முறையல்ல. அதைச் செய்பவர்களுக்கே அதனால்தீங்கு நேரிடும்.

—


### விளம்பரம்

**காஞ்சிபுரம் டி. மு. கோர்ட்டு**
S. C. O. P. 21/1946

சு. துப்புசெட்டியார்
S. K. துரைசாமி செட்டியார்
S. K. குமாரசாமி செட்டியார்
மனுதாரர்கள்.

S. K. சதாசிவ செட்டியார்
கவ. மனுதார்.

இறந்துபோன ச. கி. சுப்பராய செட்டியாருக்கு ReserveBank of India விலிருக்கும் ஷேர்தொகை ரூ. 500-0-0 யம் ஷியார் குமாரர்களான மனுதாரர்கள் தங்கள் பேருக்கு மாற்ற மனு செய்து ஷை மனு 12-6-46ல் வாய்தா போட்டிருப்பதால் ஆக்ஷேபனையுள்ளவர்கள் ஷை தேதி காலை 11-மணிக்கு கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளலாம்.

K. கிருஷ்ணசாமி அய்யங்கார்,
வக்கில்.
காஞ்சிபுரம்.

### மணமகள் தேவை

வேளாளர் குடும்பத்தில் பிறந்து படித்து வேலையிலமர்ந்திருக்கும் 22-வயதுள்ள வாலிபனுக்கு மணமகள் தேவை. ஜாதியைப்பற்றிய தடை இல்லை. அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

**திராவிட நாடு,**
**காஞ்சிபுரம்.**





Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.